செ.வெ.எண்.126/2009(செமதொஅ) நாள். 08.05.2009

# நாடாளுமன்றத் தேர்தல் பாதுகாப்பு பணிக்கு முன்னாள் படைவீராகள் சேர்ப்பு

தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் 13.05.2009 அன்று நடைபெற உள்ளது. எனவே நாடாளுமன்ற தேர்தல் பாதுகாப்பு பணியில் "ஸ்பெஷல் போலீஸ் ஆபிஸர்" ஆகப் பணிபுரிய முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் பதிவு செய்தவர்களும், பதிவு செய்யாத தகுதியும், திறமையும், விருப்பமும் உள்ளவர்களும் 11.05.2009 திங்கட்கிழமையன்று பிற்பகல் 01.00 மணிக்கு தங்களது அடையாள அட்டை, படை விலகல் சான்று, சீருடை இருப்பின் சீருடை அல்லது கம்பேட் சீருடை இவை இல்லையெனில் காக்கி சீருடை அல்லது கருப்பு பேண்ட் வெள்ளை சட்டை, ஷுஸ், பெல்ட் அணிய வேண்டும். தங்களின் இராணுவ உடையில் கம்பீரமாக இருக்க வேண்டும். இவற்றுடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள ஆயுதப் படை மைதானத்திற்கு வருமாறு காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலர் அழைப்பு விடுத்துள்ளார்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.